உ

சிவமயம்



# கிளிநொச்சி திருநெறிக்கழக கூட்டு வழிபாட்டு நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கிளிநொச்சி திருநெறிக்கழக கூட்டு வழிபாட்டு நூல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Thavathiru
Vadivel Swamy

அசத்தெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள்
ஞான ஒளியதாக வொழிய அழிவெனும் சக்தி
அமுதமாக அருள்வாய் அவனிக்கெல்லாம்
அமைதி! அமைதி! அமைதி!

# மகாதேவ ஆச்சிரமம்



Srimath
Ganeshanantha Swamy

Srimath Ganesanantha
Mahadeva Swamigal,
***MAHADEVA ASHRAMAM***
Jeyanthinagar,
Kilinochchi (Sri Lanka)
Peoples Bank, Kolinochchi A/C No. 13704

Regd No. SVP 104 / 44 of 29-10-1976

ஆசியுரை கிடைப்பதாக

ஸ்ரீமத்
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி

........./........./201....

## ஆசியுரை

திருநெறிக்கழகத்தினால் வெளியிடப்படும் பிரார்த்தனை நூல் மிகவும் உன்னதமான பணி இப்பணிக்கு இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். அடியேனையும் அன்புடன் நினைத்து ஆசியுரை கேட்ட அடியார்களுக்கும் எனது அன்பும் ஆசியும் கிடைப்பதாக

இறைபணியில்
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

மகா தேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முகவுரை

திருநெறிக்கழகம் ஆரம்பகாலத்தில் கூட்டு வழிபாட்டு நூல்களைத் தொகுத்து வெளியிட்டது. அந்நூல் இங்கு உள்ள எல்லாக் கோவில்களிலும் , யாழ்ப்பாணத்தில் சில கோவில்களிலும் பயன்படுத்தப்பட்டது.

பின்னர் எம்மத்தியில் ஏற்பட்ட அவல நிலைகளால் பயன்பாடு அற்றுப்போய்விட்டது. மீண்டும் அத்தகைய கூட்டு வழிபாட்டு நூலைக்கழகம் வெளியிடுகிறது. இது அமரர். த.நல்லதம்பி அவர்கள் கூட்டுவழிபாட்டில் உபயோகித்தது. கோவில்களில் இந்நூலைப் பயன்படுத்தி மக்கள் வழிபாட்டில் மேம்பாடடை வார்களாக.

நூலைத் தொகுத்தவர்களுக்கும், அச்சிட்டு வெளியிட்ட வர்களுக்கும் இறையருள் நிறைவாகக் கிடைப்பதாக .

வணக்கம்

இறைபணியில்

நா.சோதிநாதன்

தலைவர்

திருநெறிக்கழகம்

19.04.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்



ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# குருதோத்திரம்

குருநாதா குருநாதா - சற் குருநாதா - குருநாதா
குருநாதா குருநாதா - சற் குருநாதா - குருநாதா
தீன நாதா தீனபந்து
திவ்ய வடிவே குருநாதா
ஞானநாத ஞான போதா
ஞான வடிவே குருநாதா

(குருநாதா)

## திருஞான சம்பந்தர் தேவாரம்

பண்: கௌசிகம் இராகம்: பைரவி தாளம்: ஆதி

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்பது
வேதம் நான்கினு மெய்ப்பொருளாவது
நாத னாம நமசி வாயவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசர் தேவாரம்

பண்: பஞ்சமம்
இராகம்: கேதார கௌளை தாளம்: ஆதி

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயவே

# திருவாசகம்

பண் சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டுடக் கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சித்தி விநாயகா ஓம் நம
சிவன் திருக்குமரா ஓம் நம
அத்திமுகத்தவா ஓம் நம
ஆறுமுகன் சோதரா ஓம் நம

காரிய முதல்வா ஓம் நம
கரும்பின் கனிவே ஓம் நம
அசுரனை அழித்தாய் ஓம் நம
பிரணவச் சுடரே ஓம் நம

வலிமைக் குன்றமே ஓம் நம
வறியோர் வரமே ஓம் நம
உளமே நிறைந்தவா ஓம் நம
உண்மைப் பொலிவே ஓம் நம

கற்றவர் துணையே ஓம் நம
கவிதையின் உயிரே ஓம் நம
வெற்றியின் திருவே ஓம் நம
வேந்தே கணபதி ஓம் நம



# திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண்டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கினுள்ளொளி விளங்கு
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப்பாகா வம் பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போய கல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

# யோகர் சுவாமி

என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆள வைத்தான் எங்கள் குருநாதன்
முன்னை வினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணா எங்கள் குருநாதன்
நன்மை தீமை யறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
ஆதியந்த மில்லை யென்றான் எங்கள் குருநாதன்
அதுவே நீ யென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
ஜோதிமயம் என்று சொன்னான் எங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றான் எங்கள் குருநாதன்
சாதி சமய மில்லாதான் எங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணான் எங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தான் எங்கள் குருநாதன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோயில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்த வள்ளிதெய்வயானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோயில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
( அம்மா கற்பூர)

புவனம் முழுதாழுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவம் நவமாய் வடிவாகும் நாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்து விடும் காளிஸ்வரி
காரிருளின் திச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜெகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீயாதரி
( அம்மா கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு
உறவிடத்தில் முறையிடு - எந்துவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அந்தியரைக் கெஞ்சிடுதல் முறையோ - அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ - அம்மா
சின்னவனின் குரல் கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி எனைத்தினமும் வழியனுப்பு
(அம்மா கற்பூர)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையானாடு மானந்த
எல்லையில் தனிப் பெருங்கூத்தின
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## முருகன் பாடல்

அன்பருக்கு அன்பனே வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உரகநாபன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளைவனே
அகில லோக நாயகனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா வா வா முருகா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


# மங்களம்

*சங்கராய சங்கராய சங்கராய மங்களம்*
*சங்காரி மனோகராய சாஸ்வதாய மங்களம்*
*குரவராய மங்களம் தாத்தாத்ரேயாய மங்களம்*
*ராஜாராம மங்களம் வேணுகிருஸ்ண மங்களம்*
*கஜானனாய மங்களம் சடானனாய மங்களம்*
*சீதாராம மங்களம் ராதாகிருஸ்ண மங்களம்*
*மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்*
*மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்*
*மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்*
*மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்*

*திருச்சிற்றம்பலம்*

*முற்றிற்று*

தொகுத்தவர்: கலாபூஷணம்
செல்வராணி சோமசேகரம்பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org